[1981 ஏப்ரல் 29

இனாம் கரூர் பேரூராட்சிக்கான கூடுதல் குடிநீர் திட்டம்.

*வினா எண். 935—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தாலுகா இனாம் கரூர் பேரூராட்சிக்கு கூடுதல் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்போது முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

தோவாளை தாலுக்கா "உலக்கருவி"யில் குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 936—திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் தோவாளை தாலுக்காவில் அமைந்துள்ள "உலக்கருவி"யில் குடிநீர் வழங்கும் திட்டம் அமைப்பதற்கான செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டிலே குமரி மாவட்டத்திலே, நாகர்கோவிலிலே குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலே ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. அந்தக் கருத்தரங்கிலே இந்தத் தோவாளை தாலுகாவில் அமைந்துள்ள உலக்கருவி குடி நீர் திட்டம் அமைக்க, 1970 ஆம் ஆண்டிலே கூட அந்தப் பஞ்சாயத்து யூனியனிலே இருந்துகூட, அதற்கான இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் கட்டப்பட்டது. ஏனோ இதுவரை அது கவனிக்கப்படவில்லை. இதனால், அந்தப் பகுதியிலுள்ள ஏறத்தாழ 100 கிராமங்கள் குடிநீர் வசதி பெற வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டத்தை நல்லமுறையிலே ஆரம்பிக்க உடனடியாக இன்வெஸ்டிகேஷனுக்கு ஏற்பாடு செய்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்வார்களா? அந்தப் பகுதியிலுள்ள மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நல்ல அறிவிப்பை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.